| | |
|---|---|
| **வழக்கு எண்** | C.P.54/2024 |
| **நாள்** | 02.09.2025 |
| **சாட்சி** | WW - 1 திரு.சத்தியசீலன் |

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை : -**

நான் பணியில் இருந்து விலகுவதற்கு முன்பு Country Head – India என்ற பணிப்பொறுப்பில் இருந்தேன். இந்தியாவில் Primoris System I Pvt Ltd நிறுவனம் சார்ந்த அலுவலக நடைமுறை சம்பந்தமான தலைமை பொறுப்பை ஏற்றிருந்தேன். நான் கடைசியாக நிறுவன பொறுப்பில் 18.04.2024 அன்று வரை இருந்தேன். 18.04.2024 அன்று இரவு 7.30 மணிக்கு நிர்வாகம் என்னை Whats app call மூலம் தொடர்பு கொண்டு என்னை பணியில் இருந்து விலக்கிவிட்டதாக சொன்னார்கள். மேலும், நான் பணி செய்த நிறுவனத்தில் போதிய வருவாய், லாபம் இல்லாத காரணத்தால்தான் பணியில் இருந்து என்னை நிறுத்துவதாக சொன்னார்கள் என்பதை என் மனுவில் சொல்லியுள்ளேன். அவ்வாறு பணியில் இருந்து விலக சொன்னபோது நான் தொலைபேசியில் தொடர்ப்பு கொண்டு எனக்கு அறிவிப்பு கால அவகாசம் 3 மாதம் கோரினேன். அதற்கு நிர்வாகம் என்னுடைய வேண்டுதலை ஏற்று 3 மாதத்திற்கு பதிலாக 1 மாதம் அறிவிப்பு காலம் வழங்குவதாக சொன்னார்கள்.

மேற்குறித்த வேண்டுதல் மற்றும் நிர்வாகம் சொன்ன பதில் ஆகியவை தொலைபேசி மூலம்தான் நடந்தது. மேற்சொன்னவற்றை எழுத்து பூர்வமாகவோ, மற்றும் Digital mode மூலமாகவோ எவ்விதத்திலும், என் வேண்டுதலோ, நிர்வாக பதிலோ, ஆவணமாக நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. E.Mail மூலமாக 3 மாத கால அவகாசம் காலம் கேட்டு நிர்வாகத்திற்கு அனுப்பிய மிண் அஞ்சல் தாக்கல் செய்திருக்கிறேன். அதேபோல் என்னுடைய வேண்டுதலை ஏற்று மேற்படி நிர்வாகம் எவ்வித எழுத்துபூர்வ அங்கீகாரத்தையோ, உறுதி அறிவிப்பையோ, அல்லது ஏற்பை உறுதி செய்யும் வண்ணம் எவ்வித பதிலும் இன்று வரை கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். எனக்கு என் மனுவில் கண்டபடி என்னுடைய பணிக்கால EXPERIENCE CERTIFICATE இம்மனு நிலுவையின்போது எனக்கு நிர்வாகத்தால் வழங்கப்பட்டது. அதே போல் 2 வது பரிகாரமாக நான் கோரிய வண்ணம் DIRECTOR என்ற சட்ட நிலையில் இருந்து என்னை விடுவிக்குமாறு கோரியிருந்தேன் அது போல் விடுவிக்கப்பட்டேன். நான் நிறுவனத்தில் இருந்து பணி விலகும்போது மேற்கொள்ள வேண்டிய EXIT FORMALITY முடித்துத்தராமல் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்த பிறகுதான் என் EXIT FORMALITY முடிக்கப்பட்டது என்றால் சரிதான். என் பணி சம்பந்தப்பட்ட வருகை பதிவேடு, சம்பளத்துடன் கூடிய விடுப்பு நாட்கள் மற்றும் பணிக்கு வராத நாட்கள் பற்றிய விபரங்கள் ஆகிய ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை

என்றால் சரிதான். சம்பளப்பட்டியல் மட்டும் தாக்கல் செய்துள்ளேன். நிர்வாகத்தில் முழு நேர நிரந்தர பணியாளர்களுக்கு மட்டும்தான் Special Allowance வழங்கப்படும் என்றால் சரிதான். நான் Special Allowance பெறும் தகுதியில்தான், நான் நோட்டீஸ் பீரியடுக்கான காலத்திற்கும் கோரியிருந்தேன் என்றால் சரியல்ல. நான் நிறுவனத்தின் Country Head என்ற உயர்பணிப்பொறுப்பு மற்றும் Director என்ற நிர்வாக பணிப்பொறுப்பு ( Managerial Admin.Capacity ) என்ற நிலையில் இருந்ததால் நான் மேற்படி தொழில் நிறுவனத்தில் Workman என்ற சட்டநிலையில் உள்ள உரிமைகளை தொழிற்தகராறு என்ற சட்டத்தில் தக்கவைத்துக்கொள்ள முடியாது என்று சொன்னால் சரியல்ல. என் மாத சம்பளம் ரூ.1,25,000/- ஆகும். நான் பணிக்காலத்தில் Workman என்ற சட்டநிலையில் இருக்க வாய்ப்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. நிர்வாகத்தரப்பில் Counter Statement -ல் LUMIERE SYSTEM என்ற நிறுவனத்தில் நான் பணிபுரிந்தாக ஒரே காலகட்டடத்தில் இரு நிறுவனங்களில் பணிபுரிந்தாக எனக்கு எதிராக குற்றச்சாட்டு இருந்தது. அது பொய்யான குற்றச்சாட்டு ஆகும். மேற்படி PRIMORIS SYSTEM (I) LTD நிறுவனத்தில் வேலை பார்ப்பதற்கு முன்பு நான் KGISL என்ற நிறுவனத்தில் பணிபுரிந்தேன். நான் Dual Employment என்ற வகையில் ஒரே நேரத்தில் இரு நிறுவனங்களில் சட்டத்திற்கு புறம்பாக பணிபுரிந்ததாக கூறும் குற்றச்சாட்டை மறுக்கிறேன், நான் அவ்வாறு பணி

புரியவில்லை. அதற்கான எழுத்து பூர்வ ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பணியில் இருந்தபோது என் அடிப்படை சம்பளம் ரூ.76,080/- ஆகும். என் பணிக்காலத்தில் நான் பணி செய்த நிறுவனத்தின் தொகைகளை முறைகேடாகவும், தவறாகவும் பயன்படுத்தியதற்காக குற்றச்சாட்டு எழுந்தது ஆனால் நான் எவ்வித முறைகேட்டிலும் ஈடுபடவில்லை. ஆனால் அதற்கான ஆவணங்கள் நான் தாக்கல் செய்யவில்லை. நான் Workman என்ற சட்ட முறையில் பணி செய்யாததால் இந்த நீதிமன்றத்தில் தற்போது தாக்கல் செய்த என் மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மேலும் என் சட்டப்பரிகாரத்தை உரிய நீதிமன்றத்தில் தேடிக்கொள்ள வேண்டும் என்றால் சரியல்ல. நான் மனுவில் கோரியுள்ள இதர பரிகாரங்கள் குறித்து ஏற்கனவே நீதிமன்றம் நிவர்த்தி செய்துவிட்டது ,மேற்படி நான் கோரிய 3 பரிகாரங்களில் Experiance Certificate வழங்கப்பட்டது, Removal of DirectorShip நடைமுறை மேற்கொள்ள-ப்பட்டது. என் சம்பள பாக்கி தொடர்புடைய பரிகாரங்கள் மட்டுமே நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. என் மனு Dual Employment என்ற சட்ட முறையின் படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.